

Vol.22 | No. 5 | May 2018

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

New Priests of the Diocese
Fr. Subin Scaria, Fr. Thomas Jebanesh,
Fr. Dorathik Rajan O.S.B.



Inauguration of Madurai Mission - 15.04.2018






St. Alphonsa College - Career Guidance for +2 Students, 09.04.2018



Major Seminarians Work Camp - Kamaraj Nagar 20-25.04.2018



Vocation Camp - Minor Seminary - 28-29.04.2018

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 22 No :5 May 2018

# இறையருள்
# IRAIARUL



## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| குழந்தை ஈசோ | 08 |
| இளையோர் இயக்கம் | 09 |
| வின்செண்ட் தே பவுல் சபை | 12 |
| Birthdays | 13 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 14 |
| திருத்தொண்டுதள தொடக்கம் | 15 |
| செங்கோட்டைச் செய்திகள் | 16 |
| மறைவட்டச் செய்திகள் | 19 |
| Transfers | 22 |
| Bishop's Engagements | 24 |

*Editorial Board*

Patron
**His Excellency**
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Joseph Santhosh**
Executive Editor
**Mr. Soundara Raj**
Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**
Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Berlin Athencod**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
*Diocese of Thuckalay*

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/81/2017 30 April 2018

Dears,

As you are aware, our Holy Father Pope Francis issued an Apostolic Exhortation Gaudete et Exsultate on 19 March 2018. This Papal document re-proposes the call to holiness in a practical way for our own time. In this circular letter, I want to give you a summary of the document. The Exhortation is important for each one of us. After all, the primary reason for our becoming Priests is to sanctify ourselves and become saints.

The Apostolic Exhortation consists of five chapters. The first chapter speaks about the need to be holy. There are many kinds of saints. Besides the Church's officially recognized saints, many more ordinary people have been hidden from history books; yet they have contributed decisively to the growth of the Church. They include many Christian witnesses whose martyrdom is a feature of our time. "Each saint is a mission, planned by the Father to reflect and embody, at a specific moment in history, a certain aspect of the Gospel." Holiness is experiencing the mysteries of Christ's life, "constantly dying and rising anew with him," and reproducing aspects of his earthly life: his closeness to the outcast, his poverty, his self-sacrificing love. Hence the Pope writes: "Allow the Spirit to forge in you the personal mystery that can reflect Jesus Christ in today's world," in a mission to build the kingdom of love, justice and universal peace.

Holiness is as diverse as humanity. The Lord has in mind a particular path for each believer, not just the clergy, the consecrated, or those who live a contemplative life. We are all called to holiness, whatever be our role, "by living our lives with love and bearing witness." Among ways of bearing witness are "feminine styles of holiness," of famous women saints and the "unknown and forgotten" women who daily transform their communities. Not only through big challenges holiness grows but also through small gestures such as refusing to gossip, listening with patience and love, saying a kind word to a poor person.

Holiness keeps us faithful to our

deepest self, free from every form of enslavement, and bearing fruit for our world. Holiness does not make us less human, since it is an encounter between our weakness and the power of God's grace. But we need moments of solitude and silence before God, to face our true selves and let the Lord enter.

In the second chapter, the Holy Father discusses two subtle enemies of holiness, namely, Gnosticism and Pelagianism. They are two "false forms of holiness" that arose in early Church history. They still lead people astray. These heresies propose "an anthropocentric immanentism disguised as Catholic truth" by exaggerating human perfection without grace.

Gnostics fail to realize that the depth of our charity measures our perfection. Neither information nor knowledge measures our perfection. By separating intellect from the flesh, the proponents of this heresy reduce Jesus's teaching to a cold and harsh logic that seeks to dominate everything. But doctrine "is not a closed system, devoid of the dynamic capacity to pose questions, doubts, inquiries." Christian experience is not a set of intellectual exercises. True Christian wisdom can never be separated from mercy towards our neighbour.

The same power that Gnosticism attributed to the intellect, Pelagianism attributed to the human will and to personal effort. Though modern Pelagians speak warmly of God's grace, they suggest that human will is something pure, perfect and all-powerful, to which grace is then added. They fail to realize that in this life human weaknesses are not healed completely by grace.

Grace builds on nature. It does not make us superhuman but takes hold of us and transforms us progressively. If we reject this historical and progressive reality, we can actually refuse and block the grace of the Lord. His friendship infinitely transcends us. We cannot buy it with our works; it can only be a gift born of his loving initiative. Only this permits us to cooperate by our own efforts in our progressive transformation.

When the Christians overvalue human will and its own abilities, they tend towards obsession with the law; an absorption with social and political advantages; punctilious concern for the Church's liturgy, doctrine and prestige; vanity about the ability to manage practical matters; and, an excessive concern with programmes of self-help and personal fulfilment as well as certain rules, customs or ways of acting. The life of the Church can become a museum piece or the

possession of a select few. This deprives the Gospel of its simplicity, allure and savour, and reduces it to a blueprint that leaves few openings for the working of grace.

The third chapter looks at the Beatitudes. For Pope Francis, they are Jesus's portrayal of what it means to be holy in our daily lives. Here "happy" and "blessed" become synonymous with "holy." We gain true happiness by the faithful practice of the Beatitudes. We can only practise them if the Holy Spirit fills us with his power and frees us from our weakness, selfishness, complacency and pride.

Pope Francis describes each of the Beatitudes and stresses the various aspects of holiness. Being poor of heart is holiness; reacting with meekness and humility is holiness; knowing how to mourn with others is holiness; hungering and thirsting for righteousness is holiness; seeing and acting with mercy is holiness; keeping a heart free of all that tarnishes love is holiness; sowing peace all around us is holiness; and, accepting daily the path of the Gospel, even though it may cause us problems, is holiness.

In the twenty-fifth chapter of Matthew's Gospel (vv. 31-46), Jesus expands on the Beatitude about mercy. "If we seek the holiness pleasing to God's eyes, this text offers us one clear criterion on which we will be judged." When we recognize Christ in the poor and the suffering, we see into the very heart of Christ, his deepest feelings and choices. "Our Lord made it very clear that holiness cannot be understood or lived apart from these demands."

Misleading ideologies can lead us to separate these Gospel demands from their personal relationship with the Lord, so that Christianity becomes a sort of NGO stripped of the luminous mysticism that is evident in the lives of saints. There are also those who dismiss the social engagement of others as superficial, worldly, secular, materialist, communist or populist. Their own particular ethical preoccupation outweighs all others.

Our defence of the innocent unborn, for example, needs to be clear, firm and passionate.What is at stake is the dignity of a human life, which is always sacred and demands love for each person, regardless of his or her stage of development. But equally sacred are the lives of the poor, the destitute, the abandoned and underprivileged; the infirm and elderly exposed to covert euthanasia; victims of human trafficking and new

forms of slavery. Nor should the situation of migrants be a lesser issue compared to grave bioethical questions. For a Christian "the only proper attitude is to stand in the shoes of those brothers and sisters of ours who risk their lives to offer a future to their children."

The fourth chapter discusses the signs of holiness that we can notice in today's world. The Pope speaks about certain aspects of the call to holiness. He speaks about five great expressions of love for God and neighbour that he considers of particular importance in the light of certain dangers and limitations present in today's culture.

Perseverance, patience and meekness describe the inner strength, grounded in God, that makes it possible to give a witness of constancy in doing good. We need to recognize and combat our aggressive and selfish inclinations. Christians "can be caught up in networks of verbal violence through the internet and the various forums of digital communication." Even in Catholic media, limits can be overstepped, defamation and slander can become commonplace. "It is striking that at times, in claiming to uphold the other commandments, they completely ignore the eighth, which forbids bearing false witness or lying, and ruthlessly vilify others."

It is not good when we look down on others like heartless judges lording it over people and always trying to teach them lessons. That is itself a subtle form of violence.

Being on the path to holiness means enduring the daily humiliations. Some examples of these are "those who keep silent to save their families, who prefer to praise others rather than boast about themselves, or who choose the less welcome tasks, at times even choosing to bear an injustice so as to offer it to the Lord." To act in this way "presumes a heart set at peace by Christ, freed from the aggressiveness born of overweening egotism."

Joy and a sense of humour are the hallmarks of holiness. The saints are joyful and full of good humour. They radiate a positive and hopeful spirit, even in hard times. Ill humour is no sign of holiness. Sadness can be a sign of ingratitude for God's gifts. Today's individualistic and consumerist culture does not dispense real joy; consumerism only bloats the heart.

Boldness and passion are signs of holiness. Holiness is boldness that sparks an impulse to evangelize and to leave a mark in this world. "Boldness and apostolic

courage are an essential part of mission." If we dare to go to the fringes, we will find Jesus already there, in the hearts of our brothers and sisters, in their wounded flesh, their troubles and their profound desolation.

More than bureaucrats and functionaries, the Church needs passionate missionaries, who are enthusiastic about sharing true life. The saints surprise us and confound us. This is because by their lives they urge us to abandon a dull and dreary mediocrity. The Holy Spirit allows us to contemplate history in the light of the risen Jesus. In this way, the Church will not stand still, but constantly welcome the Lord's surprises.

Growth in holiness is a journey of living and working in communities with others. Sharing the Word and celebrating the Eucharist together foster fraternity and makes us a holy and missionary community. It also gives rise to authentic and shared mystical experiences.

Such experiences, however, are less frequent and important than small everyday things. Jesus asked his disciples to pay attention to small details: wine running out at a party, a missing sheep, a widow's two small coins, etc. Sometimes we are granted, amid these little details, consoling experiences of God.

Trust-filled prayer of any length is a response of a heart open to encountering God face to face, where the quiet voice of the Lord can be heard. In that silence, we can discern the paths of holiness to which the Lord is calling us. For each disciple, it is essential to spend time with the Master, to listen to his words, and to learn from him always. God enters our history, and so our prayer is interwoven with memories. We need to think of our own history when we pray, and there we will find much mercy.

Prayer of supplication is an expression of a heart that trusts in God and realizes that it can do nothing of itself. Prayer of petition often calms our hearts and helps us persevere in hope. Prayer of intercession is an act of trust in God and, at the same time, an expression of love for our neighbour. In the Eucharist, the written word attains its greatest efficacy, for there the living Word is truly present.

In the final chapter, Pope deals with the need to combat evil that exists in the world. He also speaks about discernment. Evil is present from the very first pages of the Scriptures. We should not dismiss the devil as a myth, a figure of speech or an idea, lest we let down

our guard and end up more vulnerable.

Our path towards holiness is a constant battle for which the Lord equips us with prayer, the Word of God, the celebration of Mass, Eucharistic adoration, sacrament of Reconciliation, works of charity, etc.

The path of holiness is a source of peace and joy, given to us by the Spirit. How can we know if something comes from the Holy Spirit, not from the spirit of the world or the devil? By discernment, which differs from intelligence and common sense. The gift of discernment is all the more necessary today because contemporary life proclaims so many distractions as equally valid and good.

Discernment is a grace. It is not only for the more intelligent or better educated. It requires no special abilities, but it does require listening to the Lord, to others, and to reality itself, which always challenges us in new ways. Listening frees us to set aside our own partial or insufficient ideas, our usual ways of seeing things. We need to discern God's timetable, lest we disregard his invitation to grow. For this reason, the Pope asks all Christians to examine their conscience daily in sincere dialogue with the Lord.

We need the silence of prolonged prayer to better perceive God's language, interpret the real meaning of the inspirations we believe we have received, calm our anxieties and see the whole of our existence afresh in God's own light.

Our attentive discernment entails obedience to the Gospel as the ultimate standard, but also to the Magisterium that guards it, as we seek in the treasury of the Church for whatever is most fruitful for the 'today' of salvation; for rigidity has no place before the perennial 'today' of the risen Lord.

God asks everything of us, yet he also gives everything to us. He does not want to enter our lives to diminish them but to bring them to fulfilment. Let us ask the Holy Spirit to pour out upon us a fervent longing to be saints for God's greater glory, and let us encourage one another in this effort. In this way, we will share a happiness that the world will not be able to take from us.

This Apostolic Exhortation of Pope Francis has come at a providential time. It contains ample materials for our Priestly life. I invite everyone of your to procure a copy of the Apostolic Exhortation and read it. I am sure you will find abundant spiritual resources for your sanctification.

CONCLUSION

The month of May, that we are in, is celebrated as the month of Our Blessed Mother. We celebrate three important feasts of Mary during this month. On 13 May, we keep the feast of Our Lady of Fatima. On 24 May, we celebrate the solemnity of Mary Help of Christians. On 31 May, we commemorate the Visitation of Our Blessed Lady to St Elizabeth. I invite you, dear Fathers, to recognize the important role that Our Blessed Mother plays in the lives of Priests. We need to make ourselves worthy of receiving the protection and guidance of the heavenly mother through our commitment to our Priestly ministry. Let us not pass by this month of Mary without reflecting upon her motherly intervention in the lives of Priests. Let us also help our people to come closer to our heavenly Mother by organising various Marian devotions. May we become worthy sons of our heavenly mother!

With my prayers and blessings,

Yours in Christ Jesus,

+George Rajendran SDB

Bishop of Thuckalay

---

HOLY CHILDHOOD

குழந்தை ஈசோ

## குழந்தை ஈசோ இயக்கம்

"ஈசோ ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும், மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்." (லூக் 2:52)

**மறைவட்ட கருத்தரங்கம்**

தக்கலை மறைமாவட்டத்தின் குழந்தை ஈசோ இயக்கக் குழந்தைகளுக்கான மறைவட்ட கருத்தரங்கம் 22.04.2018 அன்று ஆறுகாணி திருக்குடும்ப ஆலயத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை ஜோமோன் மங்கலாமடத்தில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கடவுளைப் பற்றியும் விவிலியத்தில் இறைவார்த்தைகளைப் படிப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்பது பற்றியும் அருட்தந்தை ஆன்றணி மாடப்புரைக்கல் அவர்கள் வகுப்பு நடத்தினார்கள்.

**ஆண்டு விழா**

ஆண்டு விழா ஜூன் 2ம் தியதி கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் வைத்து நடைபெற்றது.

அருட்தந்தை ஜோமோன்

இயக்குநர்

YOUTH APOSTOLATE இளையோர் பணி

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

**தலைமைத்துவ மற்றும் தொழில் முனைவு பயிற்சி பாசறை**

மறைவட்ட இளைஞர் இயக்க பொறுப்பாளர்களுக்கான ஒரு நாள் தலைமைத்துவம் மற்றும் தொழில் முனைவு பயிற்சி பாசறையானது 14.04.2018 சனிக்கிழமை அன்று காலை 9:30 மணியளவில் தக்கலை மறைமாவட்ட இளைஞர் இயக்க இயக்குநர் சந்தோஷ் அவர்கள் தலைமையில் ஆரம்பமானது.

சகோதரர் அலெக்ஸ் அவர்களால் சமூகத்தின் மேம்பாட்டில் இளைஞர்களின் பங்கு, தன்னிச்சையாக தொழில் தொடங்க இளைஞர்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் ஒரு நல்ல தலைவனுக்கான பண்புகள் குறித்து கலந்துரையாடலுடன் வகுப்பு நடத்தப்பட்டது.

இப்பயிற்சி பாசறையின் முக்கிய நோக்கங்களில் ஒன்று அடுத்த ஆண்டிற்கான மறைமாவட்ட பொறுப்பாளர்களுக்கான தேர்தல் அதன் அடிப்படையில் இளைஞர்கள் தன்னார்வத்தோடு செயல்படுவதற்கும் பொறுப்புகளை ஏற்று சிறந்த முறையில் நடத்துவதற்கும் தங்கள் திறமைகளை கண்டுணர்வதற்கும் ஏற்ற வகையில் தேர்தல் நடைபெற்றது. 35 மறைமாவட்ட பொறுப்பாளர்கள் கொண்ட இக்குழுவில் இருந்து மறைமாவட்ட தலைவராக செல்வன் ஜினோ மஞ்சாலுமூடு, துணைத் தலைவர்களாக செல்வன் ராஜேந்திரபாபு மாங்கரை மற்றும் செல்வி அபிமோள் வயலின்கரை, செயலராக செல்வி பபிஷா ஜூலிட் பிலாங்காலை, துணை செயலராக செல்வன் ஜெசின் தெற்றியோடு மற்றும் பொருளராக, செல்வன் அஜீஷ் ஆறுகாணி ஆகியோர் தேர்ந்து கொள்ளப்பட்டனர்.

மேலும் இக்கூட்டத்தில் நம் மறைமாவட்டத்தில் தொடங்க இருக்கும் "DOCAT" குறித்து கலந்துரையாடப்பட்டது. "DOCAT"ன் முக்கியத்துவம் பற்றியும் அதன் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது.

பின்னர் வரும் ஆண்டிற்கான இளைஞர் இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப் பட்டது. மாலை 4 மணியளவில் இப்பயிற்சி பாசறையானது இனிதே நிறைவடைந்தது.

**மறைமாவட்ட அறிக்கை**

08.04.2018 அன்று ஆறுகாணி ஆலய இளையோர்களை சந்தித்து இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களால் திறமை, செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. மறைவட்ட

பொறுப்பாளர்களுக்கான தேர்தல் நடைபெற்றது. அஜீஷ் ஆறுகாணி தலைவராகவும், விபின் வில்சன் துணைத் தலைவராகவும், சரண்யா செயலராகவும், ஜோசுனா துணைச் செயலராகவும், ஜித்து பொருளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

29.04.2018 அன்று வாறுதட்டு ஆலய இளையோர்களை இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் மற்றும் தலைவர் ஜினோ, துணைத் தலைவர் அபிமோள், துணைச் செயலர் ஜெசின் ஆகியோர் பார்வையிட்டனர். மறைவட்ட தலைவராக ஜனலெற் வாறுதட்டு



அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். “DOCAT“ குறித்து பேசப்பட்டது.

22.04.2018 அன்று நெட்டா ஆலய இளையோர்களை மறைமாவட்ட பொருளர் அஜீஷ் அவர்கள் பார்வையிட்டார். ஆறுகாணி மறைவட்டத்திற்கு புதிய தலைவராக பிரபின் நெட்டா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

21.04.2018 அன்று படந்தாலுமூடு திருஇருதய ஆலய வளாகத்தில் வைத்து மறைமாவட்ட பொறுப்பாளர்களுக்கான கூடுகை இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முக்கிய விவாதங்களாக “DOCAT”, மது ஒழிப்பு வீதி நாடகம், மே மாத பயிற்சி முகாம் ஆகியவைகள் விவாதிக்கப்பட்டன. தலைவர்களை தேர்ந்தெடுத்தல், இளைஞர் இயக்கத்தை பார்வையிடுதல் என தீர்மானிக்கப்பட்டது.

### சூசைபுரம் மறைவட்ட அறிக்கை

சூசைபுரம் மறைவட்ட இளையோருக்கான கூட்டமானது 29.04.2018 அன்று மாலை 4.30 மணிக்கு இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் தூய ஆவி பாடலுடன் தொடங்கப்பட்டது. மறைமாவட்ட துணைத் தலைவர் ராஜேந்திர பாபு அனைவரையும் வரவேற்றார். ராஜேந்திர பாபு அவர்கள் மறைமாவட்ட துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதால், புதிய தலைவராக ஸ்டார்பின் அவர்கள் பாலப்பள்ளம் தேர்ந்தெடுக்கப் பட்டார். சிறப்பு விருந்தினர்கள் அருட்தந்தை ஜஸ்டின் சுதீஷ் அவர்கள் இளைஞர்களை உற்சாகமூட்டும் முறை குறித்தும்

அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் செங்கோட்டை இளையோரை முன்கொண்டு வருதல் குறித்தும் பேசினார். மறைமாவட்ட தலைவர் 'விதைப்பவர் உவமை' கூறி இன்றைய இளைஞர்கள் நல்ல விளைச்சலைக் கொடுக்க வேண்டுமெனவும் மறைவட்ட துணைத் தலைவர் சுஜி லெட் அவர்கள் 'விழிப்போடு இருப்போம்' என்ற தலைப்பிலும்



பேசினார். இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் "DO-CAT" குறித்து விளக்கம் அளிக்க, மறைவட்ட செயலர் ஸ்டெபி அவர்கள் நன்றி கூற இளைஞர் இயக்க பாடலுடன் கூட்டமானது இனிதே நிறைவுபெற்றது.

22.04.2018 அன்று சூசைபுரம் மற்றும் பாலப்பள்ளம் ஆலய இளையோர்களை இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் மற்றும் துணைத் தலைவர் ராஜேந்திர பாபு ஆகியோர் பார்வையிட்டனர்.

### மஞ்சாலுமூடு மறைவட்ட அறிக்கை

22.04.2018 அன்று 3 வது மறைவட்ட கூட்டமானது இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் தொடங்கிய கூட்டத்தை செயலர் பென்சி செபத்தால் தொடங்கி வைத்தார். தந்தை பேசும் போது பொறுப்பாளர்கள் நன்முறையில் செயல்பட வேண்டுமெனவும், இளையோர்கள் சவால்களை எவ்வாறு கையாள வேண்டுமெனவும், புதியதாக தொடங்க இருக்கும் "DOCAT" குறித்து பேசினார். கூட்டத்திற்கு மறைமாவட்ட தலைவர் ஜினோ மற்றும் துணைச் செயலர் ஜெசின் ஆகியோர் கலந்து கொண்டார்கள். ஜினோ அவர்கள் மறைமாவட்ட தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதால் தேர்தல் நடைபெற்றது. புதிய மறைவட்ட தலைவராக விஜில் மஞ்சாலுமூடு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.




அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைவரை அறிமுகப்படுத்தி பொறுப்புக்களை ஒப்படைத்தார். செயலர் பென்சி நன்றி கூற இளைஞர் இயக்க பாடலுடன் கூட்டமானது இனிதே நிறைவு பெற்றது.

பபிஷா ஜூலிட்
செயலர்



# VINCENT-DE-PAUL வின்செந்தியர்



# தக்கலை மத்திய சபை

**தவக்கால தியானம்**

மத்தியசபை சார்பில் வழக்கமாக ஆண்டுதோறும் நடைபெறும் தவக்கால தியானமானது ‘இறையோடு ஒருநாள்’ என்ற மையச் சிந்தனையோடு மார்ச் 18 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை சுமார் 9.30 மணியளவில் கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் இறைபுகழ்ச்சி பாடல்களோடு தொடங்கியது. ஜெபமாலையினைத் தொடர்ந்து இளைஞர்களின் இயக்குநர் ஜோசப் சந்தோஷ் அவர்கள் தவக்காலச் சிந்தனைகள் என்னும் தலைப்பில் வகுப்பு நடத்தினார்கள். தொடர்ந்து சீனாய் தியான இல்ல இயக்குநர் அருட்தந்தை மிஜோ அவர்கள் ஒப்புரவு குறித்து வகுப்பு நடத்தினார். காலை நிகழ்வில் மஞ்சாலுமூடு வட்டாரச் சபைத் தலைவர் சகோ. விஜயராஜன், அவர்கள் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களின் பெயர் கொண்ட திருநாள் வாழ்த்துக்களைக் கூறினார். தொடர்ந்து நடைபெற்ற ஒப்புரவு வழிபாட்டில் 7க்கும் மேற்பட்ட அருட்தந்தையர்கள் ஒப்புரவு வழிபாடு வழங்கினர். சுமார் 3.00 மணியளவில் மத்திய சபை ஆன்மீக இயக்குநர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. தந்தையின் பெயர்க் கொண்ட புனிதரின் திருநாள் வாழ்த்துக்களை மத்திய சபை மூத்த உறுப்பினர் சகோ. சௌந்தரராஜ் அவர்கள் கூறினார்கள். நிறைவாக மத்திய சபை செயலர் சகோ. எட்வின் சன் நன்றி கூற தியானம் சிறப்புற நிறைவுற்றது.

**இங்கிலாந்து வின்செந்தியர்கள் சந்திப்பு**

நமது மத்திய சபையை பார்வையிட இங்கிலாந்து வின்செந்தியர்கள் 07.02.2018 அன்று வருகை புரிந்தனர். அவர்களுக்கு உத்திரங்கோடு ஒசானாம் உயர்கல்வி நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. கூட்டத்தின் தொடக்க செபத்தை மத்திய சபை செயலர் சகோ. எட்வின்சன் வழிநடத்தினார். ஒசானாம் நிலைய மாணவ மாணவியரின் வரவேற்பு பாடல் நடைபெற்றது. மூத்த துணைத் தலைவர் சகோ. சௌந்தரராஜ் அவர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றார். விரிவான அறிக்கை ஒன்றை மத்திய சபை தலைவர் சகோ. ஐயாத்துரை அவர்கள் வாசித்து சமர்ப்பித்தார். மத்திய சபையின் ஆன்மீக

இயக்குநர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையுரையாற்றினார்.

இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் மத்திய சபையின் திட்ட அலுவலர் சகோ. செபாஸ்டின் வில்லியம் அவர்கள் பார்வை குறித்து விளக்கி பேசினார். தொடர்ந்து சகோ. கொரான்ய் டேவிட் டிரக் போர்க் மற்றும் சகோ. கெனித் ஜேம்ஸ் மதேன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். பிலாங்காலை, நித்திரவிளை, மஞ்சாலுமூடு வட்டார சபைக்குட்பட்ட கிளைச்சபைகள் (இங்கிலாந்து நாட்டின் இரட்டையர் உதவி பெறும்) சார்பில் திட்டம் வழங்கப்பட்டது. பின்னர் கல்வி உதவித் தொகையும் வழங்கப்பட்டது. நிறைவாக மத்திய சபையின் கல்வி அலுவலர் சகோ. சோனிக் ரீகன் நன்றி கூற சகோ. றாபி அவர்கள் இறுதி செபம் கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

**மத்திய சபை ஆண்டுவிழா**

20.05.2018 ஞாயிற்றுக்கிழமை புனித வின்செென்ட் தே பவுல் தக்கலை மத்திய சபையின் 20-வது ஆண்டுவிழா பேரருட்தந்தை அகஸ்டின் தலோடில் மற்றும் இந்திய தேசிய தலைவர் முன்னிலையில் முக்கூட்டுக்கல் திருக்குடும்ப ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற உள்ளது.

செயலர் | எட்வின்சன்


## BIRTHDAYS OF REV FATHERS - MAY

| | | | |
|---|---|---|---|
| Fr. Tobin Alappurackal | 02 | 25 | Fr. Robin Kurumullil |
| Fr. Augustine Thottananiyil CMI | 05 | 27 | Fr. Sam Puthuparampil CMI |
| Fr. Subin Puthenpurackal | 05 | 28 | Fr. Christudas M |
| Fr. Davis Karukappally CMI | 10 | 29 | Fr. Tinu Kottackaparampil CMI |
| Fr. John Paul PuthuvalPuthen | 17 | 29 | Fr. Siji Puthenveliyil CMI |
| Fr. Thomas Pockavarayath CMI | 20 | 30 | Fr. Thankachan Joseph SDB |
| Fr. Jinoy Thottiyil | 24 | 31 | Fr. Justin Sutheesh |
| Fr. Jijy Koipuram | 25 | 31 | Fr. John Joseph |

**வாழ்க்கை வழிகாட்டி முகாம்**

பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கான வாழ்க்கை வழிகாட்டி முகாம் ஏப்ரல் 9 அன்று புனித அல்போன்சா கல்லூரியில் வைத்து நடைபெற்றது. பல்வேறுவிதமான உயர் கல்வி படிப்புகள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

# அருட்சகோதரர்களிடமிருந்து...




### குருத்துவ அருட்பொழிவு

திருத்தொண்டர் சுபின் அவர்கள் ஏப்ரல் 2 அன்று சங்ஙனாச்சேரி துருத்தியில் வைத்தும் திருத்தொண்டர் தோமஸ் ஜெபனேஷ் அவர்கள் ஏப்ரல் 7 அன்று சூசைபுரத்தில் வைத்தும் ஏப்ரல் 6 அன்று திருத்தொண்டர் டோரத்திக் O.S.B. Cam அவர்கள் ஏப்ரல் 7 அன்று கல்லுவிளையில் வைத்தும் ஆயர் அவர்களால் குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டனர். புதிய அருட்தந்தையர்களின் இறைபணி சிறக்க வாழ்த்துக்கள்.

### களப்பணி முகாம்

அருட்சகோதரர்களுக்கான விடுமுறைகால களப்பணி முகாம் ஏப்ரல் 20 முதல் 25 வரை படந்தாலுமூடு காமராஜ் நகரில் நடைபெற்றது. முகாமை ஆயர் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி தொடங்கி வைத்தார். அன்றைய நாள் அருட்சகோதரர்கள் தெற்றியோடு ஆசீர் வித்யாலயா மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகளோடு மதிய உணவை பகிர்ந்துண்டனர். முகாமின் நிறைவு விழாவில் தெற்றியோடு எப்.சி.சி அருட்சகோதரிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முகாமில் விரைவில் தொடங்க இருக்கும் புலரி கம்யூனிக்கேஷன் கட்டிட புனரமைப்புப் பணிகளை செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### புதிய தலைவர்

நிறைவு விழாவுக்குப்பின் அருட்சகோதரர்களின் புதிய தலைவர் தேர்வு நடைபெற்றது. புதிய தலைவராக அருட்சகோதரர் றோபின் ஜோஸ் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார். முன்னாள் தலைவருக்கு நன்றியும் பாராட்டுதலும் வழங்கப்பட்டது.

### இன்பச் சுற்றுலா

அருட்சகோதரர்களின் இன்பச் சுற்றுலா ஏப்ரல் 26 அன்று நடைபெற்றது. கொச்சி ஒண்டர்லாவை கண்டுகளித்தனர்.

### விசுவாச பயிற்சி விழா

27 மற்றும் 28 ஆகிய இருநாட்கள் விசுவாச பயிற்சி விழாவிற்கான தயாரிப்புப் பயிற்சி காட்டாத்துறை தூய மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் அருட்சகோதரர்கள் தலைமையில் நடைபெற்றது. பயிற்சி வகுப்புகள், விளையாட்டுகள், செய்கைப்பாடல்கள் பயிற்றுவிக்கப்பட்டது.

அருட்சகோதரர்கள் ஏப்ரல் 30 முதல் மே 13 வரை இருவார காலம் விசுவாச பயிற்சி விழாவிற்காக பங்குகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

### ஆயர் சந்திப்பு

மே 14 அன்று ஆயர்

அவர்கள் இவ்வாண்டு உயர் குருத்துவக் கல்லூரியில் இறையியல் மற்றும் மெய்யியல் முதலாண்டு பயிலவிருக்கும் அருட்சகோதரர்களை சந்தித்து ஆலோசனை வழங்குகிறார்.

**களப்பணி**

இவ்வாண்டு எட்டு அருட்சகோதரர்கள் களப்பணியாற்ற உள்ளனர். அதன்படி அருட்சகோதரர்கள் அஜின் கல்லுவிளை, ஷிஜின் சங்கமம், ஆல்வின் ஜோஸ் ஆயர் இல்லம், அஜு முக்கூட்டுக்கல் இளங்குருமடம், ஜினு காரோடு, லிஜு தெற்றியோடு, ஜார்ஜ்குட்டி கிள்ளியூர், பிரின்ஸ் நித்திரவிளை ஆகிய பணிதளங்களில் மே 15 முதல் களப்பணியை தொடங்க உள்ளனர்.

ரோபின் ஜோஸ்
அருட்சகோதரர் தலைவர்

## மதுரை திருத்தொண்டு தள தொடக்கம்

மதுரை திருத்தொண்டுதள தொடக்கவிழா மற்றும் தூய சாவறா திருத்தொண்டு நிலைய ஆலய தொடக்கம் ஏப்ரல் 15 அன்று மாலை 5 மணிக்கு ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலியுடன் ஆரம்பமானது. இதற்கு முன் தயாரிப்பாக ஏப்ரல் 14 அன்று காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை தக்கலை ஆயர் இல்லத்தில் ஒருநாள் ஆராதனை நடைபெற்றது. ஆயர் அவர்கள் தலைமையில் ஆவணக்காப்பாளர் பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன், கோவை மாகாண சிஎம்ஐ அருட்தந்தை டேவிஸ் தட்டில், பங்குத்தந்தை அருட்தந்தை அனிஷ் செறுப்பறம்பில், முன்னாள் பங்குத்தந்தை அருட்தந்தை நிமிஷ், அருட்தந்தை அலக்ஸ் புத்தேட் ஆகியோர் திருப்பலி நிறைவேற்றினர். தூய சாவறா சமூகம் பங்குநிலைக்கு உயர்த்தப்பட்டு அருட்தந்தை அனீஷ் அவர்கள் பங்குத்தந்தைகயாக நியமிக்கப்பட்டார். திருப்பலிக்குப்பின் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு அருட்தந்தை டேவிஸ் தட்டில் அவர்கள் தலைமையேற்க, மதுரை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜெயராஜ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். தக்கலை மறைமாவட்டம் சார்பில் மறைமாவட்ட அருட்பணிப்பேரவை துணைச்செயலர் குமரித்தோழன் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து திரு. ஜோமிச்சன் அவர்கள் ஆலயம் கட்டுவதற்கு அன்பளிப்பாக 17 சென்ட் நிலத்திற்குரிய ஆவணங்களை வாசித்து வழங்கினார். இவ்விழாவில் மறைமாவட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் இறைமக்கள் பலரும் கலந்து கொண்டனர். பல்வேறு கலைநிகழ்சிகளும் நடைபெற்றது.

# செங்கோட்டைச் செய்திகள்

**ஒருநாள் தியானம்**

10.03.2018 அன்று வாஞ்சி ஆலயத்தில் வைத்து ஒருநாள் தியானமானது நடைபெற்றது. காலை 9.30 மணியளவில் செபமாலையுடன் ஆரம்பமானது. பாளையம் கோட்டை மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை லியோ அவர்கள் தியான உரை வழங்கினார், ஏராளமானோர் இத்தியானத்தில் பங்குகொண்டு இறை ஆசீர் பெற்றுச் சென்றனர்.

**இளைஞர் இயக்கம்**

11.03.2018 அன்று தக்கலை மறைமாவட்ட அளவில் நடைபெற்ற இளைஞர்களுக்கான தியானத்தில் செங்கோட்டை மறைபரப்பு தளத்திலிருந்து 17 இளைஞர்கள் அருட்தந்தை றோணி எம்.சி.பி.எஸ் அவர்கள் தலைமையில் அருட்சகோதரி கிறிஸ்டி எம்.சி, லிபியா சி.எம்.சி அவர்களுடன் இணைந்து இத்தியானத்தில் பங்கு கொள்ள சென்று இறையாசீர் பெற்று திரும்பினார்.

**மறைபரப்பு பணியாளர்களின் கூடுகை**

மார்ச் மாதக் கூடுகையானது 27 ஆம் தேதி புனித ஜோசப் பள்ளியில் வைத்து நடைபெற்றது. 6.30 மணியளவில் ஆராதனையுடன் ஆரம்பமானது. அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் மறையுரை வழங்கினார். பின்பு ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டது. தொடர்ந்து கூடுகையானது நடைபெற்றது. தங்களது பெயர் கொண்ட திருநாளைக் கொண்டாடிய அருட்தந்தை ரெஜீ எம்.சி.பி.எஸ் மற்றும் அருட்சகோதரி ஜெய ஜோஸ் பி.சி அவர்களுக்கு வாழ்த்துக்கள் பரிமாறப்பட்டன. புதிதாக வருகை தந்த அருட்சகோதரர் பினு எம்.சி.பி.எஸ் அவர்களை அனைவரும் வரவேற்றனர். பக்த இயக்கங்களின் பொறுப்பாளர்கள் அதன் செயல்பாடுகளைப் பற்றி கலந்துரையாடினார். அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் கடந்த கிறிஸ்மஸ் கரோல் போட்டியில் முதலிடம் பெற்ற மேக்கரை பங்கின் பங்குதந்தை ஜிப்ஸன் எம்.சி.பி.எஸ் அவர்களுக்கும், அருட்கன்னியர்களுக்கும் பாராட்டுகளைத் தெரிவித்தார். இளைஞர்களின் தியானத்திற்கு பொறுப்பேற்று அவர்களை அழைத்துச் சென்ற அருட்தந்தை றோணி எம்.சி.பி.எஸ் அவர்களுக்கும், அருட்கன்னியர் களுக்கும் நன்றிகளும் பாராட்டுகளையும் தெரிவித்தார்.

**புனித வெள்ளி**

புனித வெள்ளி அன்று செங்கோட்டை மறைபரப்பு தளத் தின் அனைத்து பங்குகளிலிருந்து குருக்கள், கன்னியர்கள் மற்றும் இறைமக்கள் அனைவரும் பார்டரில் ஒன்றிணைந்து சிலுவைப்பாதை

நடத்தினர். மதியம் 11 மணியளவில் சிலுவைப்பாதையானது ஆரம்பமானது வாஞ்சி ஆலயம் வரை சிலுவைப்பாதை நடை பயணமானது நடைபெற்றது. இதில் ஏராளமானோர் பக்தியுடன் இந்த சிலுவைப்பாதை நடைபயணத்தில் பங்கெடுத்தனர். இறுதியில் வாஞ்சி ஆலயத்தில் வைத்து அருட்தந்தை செபி அவர்கள் சிலுவைப்பாடுகளைப்பற்றி மறையுரை ஆற்றினார். அனைவருக்கும் கஞ்சி வழங்கப்பட்டது.

**திருவிழா**

மேக்கரை புனித ஜார்ஜியார் ஆலயத் திருவிழா 22.04.2018 அன்று ஆயர் அவர்களால் கொடி ஏற்றப்பட்டு துவங்கப்பட்டது. அன்று புதிய கொடிமரம் மற்றும் கல்குரிசு மந்திரிக்கப்பட்டது. தொடர்ந்து 8 நாட்கள் மிகச் சிறப்பான முறையில் ஆடம்பரத் திருப்பலி, நவநாள் செபம், பக்த இயக்கங்களின் ஆண்டுவிழா கலைநிகழ்ச்சிகள், செண்டமேளத்தோடு கூடிய பவனி ஆகியவைகளால் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இறுதிநாளான 29.04.2018 அன்று செங்கோட்டை மறைபரப்பு தளத்திலுள்ள அனைத்து பங்குகளிலுள்ளவர்கள் இணைந்து இராசைத் திருப்பலியில் பங்கெடுத்தனர். அருட்தந்தை செபி அவர்களின் தலைமையில், அருட்தந்தை ஜிப்சன் எம்.சி.பி.எஸ் மற்றும் அருட்தந்தை அனூப் எம்.சி.பி.எஸ் ஆகியோர் இணைந்து திருப்பலியை நிறைவேற்றினர். அதன் பின் கொடியிறக்கப்பட்டு, அன்பு விருந்து வழங்கப்பட்டது. திருவிழா சிறப்புற அயராது உழைத்த பங்குதந்தை ஜிப்சன் எம்.சி.பி.எஸ் அவர்களுக்கு பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**விவிலிய வினாடி வினா போட்டி**

செங்கோட்டை மறைப்பரப்பு தளத்தின் திருப்பணியாளர் இயக்கத்தின் சார்பாக மறைக்கல்வி மாணவர்களுக்கு அருட்தந்தை லிஜோ அவர்களின் தலைமையில் வாஞ்சி ஆலயத்தில் வைத்து 29.04. 2018 அன்று விவிலிய வினாடி வினா போட்டியானது நடைபெற்றது. அதில் புதூர் பங்கு மாணவர்கள் முதல் பரிசையும், புளியரை பங்கு மாணவர்கள் 2வது பரிசையும், வாஞ்சி பங்கு மாணவர்கள் 3வது இடம் பரிசையும் பெற்றனர்.

**பணியாளர்களின் ஆண்டுவிழா**

செங்கோட்டை மறைபரப்பு தளத்தின் உறுப்பினர் கூடுகையானது கடந்த மே 30, 2017 அன்று ஆயர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டு ஓராண்டு நிறைவடைந்ததன் நிறைவு விழா ஏப்ரல் 22, 2018 அன்று மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அத்துடன் ஆயர் அவர்களின் பிறந்தநாள் மற்றும் பெயர் கொண்ட புனிதரின் விழாவும் கொண்டாடப்பட்டது. அருட்தந்தை

செபி அவர்கள் ஆயர் அவர்களுக்கு வாழ்த்துரை கூறினார். ஒவ்வொரு பங்கைச் சேர்ந்த குருக்கள் மற்றும் கன்னியர்கள் இணைந்து கலைநிகழ்ச்சிகள் நடத்தினர். பக்த இயக்கங்களின் ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் கடந்த ஒரு வருடத்தின் முக்கிய நிகழ்வுகள், செயல்பாடுகள், வளர்ச்சி ஆகியவற்றை எடுத்துக்கூறி அனைவருக்கும் நன்றிகளை எடுத்துக்கூறினார்.

இறைத்தூது பணி வழியாக செங்கோட்டை மறைபரப்பு தளம் வளர அனைவரின் செப உதவிகளை கேட்டுக்கொள்கிறேன்.

அருட்தந்தை ஜாண்பால்
ஒருங்கிணைப்பாளர்

| மே மாத சிறப்பு நிகழ்வுகள் | |
|---|---|
| 1 | அருட்பணிப்பேரவை |
| 8-10 | AIDACT தேசிய கூடுகை - சங்கமம் |
| 12 | சீனாய் இறையியல் கல்வி மையம் தொடக்கம் |
| 15 | ஆசிரியர் கருத்தரங்கு |
| 16-17 | கல்வி கொள்கை கருத்தரங்கம் |
| 24 | அருட்தந்தையர் கூட்டம் |

**ஆயர் சந்திப்பு**

ஆயர் அவர்களின் அலுவலக சந்திப்பு ஏப்ரல் 13 அன்று புனித அல்போன்சா கல்லூரியில் நடைபெற்றது. கல்லூரி மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய ஆயர் அவர்கள் பின், ஒவ்வொரு துறைகளின் மாணவர் பிரதிநிதிகளை சந்தித்து உரையாடினார். தொடர்ந்து துறைவாரியாக ஆசிரியர்களையும் சந்தித்து கல்லூரி வளர்ச்சிக்கான ஆலோசனைகளையும் கேட்டறிந்தார். இதன் நிறைவு ஏப்ரல் 19 அன்று ஆசிரியர் மற்றும் அலுவலக பணியாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது. ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் செய்திருந்தார்.

**பெயர் கொண்ட திருநாள்**

ஆயர் அவர்களின் பெயர் கொண்ட திருநாள் மற்றும் பிறந்தநாளை முன்னிட்டு அண்டை மறைமாவட்ட குழித்துறை ஆயர் மேதகு ஜேரோம் தாஸ் அடிகளார் மற்றும் மார்த்தாண்டம் ஆயர்



மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆகியோர் ஏப்ரல் 24 அன்று வருகை தந்து வாழ்த்துக்கள் கூறினர்.

# மறைவட்ட செய்திகள்




## நித்திரவிளை மறைவட்டம்

**முஞ்சிறை**

முஞ்சிறை புனித ஜார்ஜியார் திருத்தலத்தின் 47 வது ஆண்டு விழா மற்றும் பங்கு குடும்பவிழா 20.04.2018 அன்று திருக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 30.04.2018 காலை இறந்தவர்களுக்கான நினைவுத் திருப்பலியுடன் நிறைவுபெற்றது.

திருத்தல விழாவின் முதல் நாள் மாலை 5.30 மணிக்கு ஜெபமாலை தொடர்ந்து 6.00 மணிக்கு நமது ஆயர் மேதகு ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் திருக்கொடி ஏற்றி ஆடம்பர திருப்பலி நிறைவேற்றி அன்பு, ஒற்றுமை இக்கருத்துக்களை வலியுறுத்தி மறையுரையாற்றி ஜெபித்து அனைவருக்கும் ஆசி வழங்கினார். திருப்பலி முடிந்தவுடன் ஆயரின் பெயர் கொண்ட திருநாள் (Feast) கொண்டாடப்பட்டது. 2, 3, 4 ஆகிய மூன்று நாட்கள் மாபெரும் நற்செய்திப் பெருவிழா சீனாய் தியான இல்ல பேரருட்தந்தை மிஜோ அவர்களால் வழிநடத்தப்பட்டது. தியானத்தின் இறுதிநாள் ஒப்புரவு வழிபாடு, தைலம் பூசுதல் வழிபாடும் நடைபெற இறைவார்த்தையாம் அருளை தங்கள் உள்ளத்தில் ஏற்று அருள் பல பெற்றனர்.

3 ஆம் நாள் காலை திருப்பலியும் தொடர்ந்து முதல் திருவிருந்து நிகழ்வும் நடைபெற்றது. 5 ஆம் நாள் சீரோ மலபார் திருச்சபையின் மிகப்பெரிய வழிபாடாகிய ஆடம்பர இராசா வழிபாடு அருட்தந்தை டோஜி பறம்பில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இறுதியில் பங்கு பாதுகாவலர் தினம் கொண்டாட அனைவரும் அன்பின் விருந்துண்டு மகிழ்ந்தனர். 6 ஆம் நாள் திருப்பலி மற்றும் நவநாளும், 7ஆம் நாள் ஆடம்பர நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது. ஆராதனையை பேரருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தியான உரையாற்றி வழிநடத்தினார். 8ஆம் நாள் உறவியங்களின் ஆண்டுவிழா நடைபெற்றது. 9ஆம் நாள் திருப்பலி தொடர்ந்து புனித ஜார்ஜியார் ஊர் முழுதும் வலம் வர சாதி, மத, மொழி, இன வேறுபாடின்றி அருள் பாவித்து அனைவரையும் ஆன்மீக ஒளியால் நிரப்பினார். 10ஆம் நாள் பங்கு குடும்பவிழா மிகச் சிறப்பாக கொண்டாடுப்பட்டது. காலை 8.00 மணிக்கு நேர்ச்சை மெழுகுவர்த்தி ஏற்றும் நிகழ்ச்சி அதனைத் தொடர்ந்து அருட்தந்தை ஜோஷி அவர்கள் திருப்பலி நிறைவேற்ற அருட்தந்தை விஜின் அவர்கள்

மறையுரை வாயிலாக இறை உயிரில் பிறக்க வைத்தார். தொடர்ந்து புனித ஜார்ஜியார் ஜாதி, மத, இன, மொழி பாகுபாடின்றி ஊரெல்லாம் அருள் பாவித்து பவனி வந்தார். தொடர்ந்து அன்பின் விருந்து, மாலையில் திருக்கொடி இறக்குதல் மற்றும் பக்த சபைகளின் ஆண்டுவிழாவோடு நிறைவுற்றது.விழா ஏற்பாடுகளை மற்றும் பங்குத்தந்தை விழாக் குழுவினர் ஏற்பாடு செய்தனர்.

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

### குருசடி திறப்புவிழா

01.05.2018 அன்று மாலை மஞ் சாலுமூடு புனித குழந்தை தெரசா ஆலய வளாகத்தில் கட்டப்பட்டிருந்த மாதா குருசடி திறப்பு விழா நடைபெற்றது. ஆயர் அவர்கள் திறந்து வைத்து வழிபாடுகள் நடத்தினார்கள். மறைவட்டத்தில் உள்ள அருட் தந்தையர்கள் மற்றும் இறைமக்களும் கலந்துக் கொண்டனர்.

## சூசைபுரம் மறைவட்டம்

### சூசைபுரம்

சூசைபுரம் பங்கைச் சார்ந்த தோமஸ் ஜெபனேஷ் அவர்களின் குருத்துவ அருட்பொழிவு ஏப்ரல் மாதம் 7ம் தியதி சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் சூசைபுரம், புனித சூசையப்பர் ஆலயத்தில் வைத்து, தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மேரிமாதா இறையியல் உயர்குருமட பேராசிரியர் அருட்தந்தை பைஜூ அவர்கள் கலந்து கொண்டார். மேலும் திருச்சூர் உயர்மறை மாவட்டத்தில் அவர் பணியாற்றிய 3 பங்குகளிலிருந்து 200க்கும் மேற்பட்டோரும் தக்கலை மறைமாவட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பல்வேறு பங்குமக்களென ஏராளமானோர் கலந்து கொண்டனர். ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற குருத்துவ அருட்பொழிவின் விழாவில் பேரருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் மறையுரையாற்றினார். விழாவினை சூசைபுரம் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்களின் தலைமையில் பங்குமக்கள் திட்டமிட்டு சிறப்பாக செய்தனர்.

### கிள்ளியூர்

கிள்ளியூர், புனித தேவமாதா ஆலயத்தில் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான சிறப்பு வகுப்பு 15.04.2018 அன்றும் மிஷன் லீக் மாணவர்களுக்கான கருத்தரங்கு 21.04.2018 அன்றும் நடைபெற்றது. 29.04.2018 அன்று மதியம் 2 மணியளவில் தாய்மார்களுக்கான கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கை பங்குதந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் சிறப்பாக வழிநடத்தினார்கள். 29. 04.2018 அன்று புதிய கைக்காரர்கள்

தேர்வு நடைபெற்றது.

**மாங்கரை**

மாங்கரை புனித வியாகப்பர் ஆலயத்தில் 22.04.2018 அன்று பங்குப் பேரவைக் கூட்டம் நடைபெற்றது. மறைக்கல்வி மாணவர்களின் கலைத்திறனை ஊக்குவிப்பதற்காக, மாணவர்களை குழுவாகப் பிரித்து போட்டிகள் நடத்தப்பட்டன. வெற்றி பெற்றவர்களுக்கு திருவிழா அன்று பரிசுகள் வழங்கப்படும்.

**பாலப்பள்ளம்**

பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் 22.04.2018 அன்று புதிய கைகாரர்கள் பதவி ஏற்பு நடைபெற்றது. திரு. ரெத்தினமணி, திரு. அருள் ஆகியோர் பதவியேற்றுக் கொண்டார்கள். பழைய கைக்காரர்களுக்கு நன்றியும், புதிய கைக்காரர்களுக்கு வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டது. 28.04.2018 அன்று சாலக்குடி டிவைன் தியான இல்லத்திற்கு 40 நபர்கள் சென்றிருக்கின்றார்கள். இதில் மறைக்கல்வி மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் பங்கு மக்கள் ஆகியோர் சென்றனர். Study centreக்கான கட்டிட வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## படந்தாலுமூடு மறைவட்டம்

**மழலையர் பள்ளி ஆண்டு விழா**

அதங்கோடு தூய மரிய கொரற்றி மழலையர் பள்ளியின் 40வது ஆண்டு விழா ஏப்ரல் 13 அன்று பங்குத்தந்தை அருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. கலை மற்றும் விளையாட்டுப் போட்டிகள் ஏப்ரல் 11 அன்று மழலையர் பள்ளி ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி மரியா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பாட்டிலில் தண்ணீர் நிறைத்தல், பயறு பொறுக்குதல், பாடல், பேச்சு, மாறுவேட போட்டிகளும் நடைபெற்றன. ஆண்டுவிழா இறைவணக்கப் பாடலுடன் ஆரம்பமானது. பெற்றோர் ஆசிரியர் தலைவர் திருமதி ஜெயா மற்றும் ஆசிரியர் திருமதி ஸ்டெல்லா ஆகியோர் அறிக்கை சமர்ப்பித்தனர். சிறப்பு விருந்தினராக திரு பெர்லின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் தலைமையுரையாற்றி பெற்றோர்களுக்கான பரிசுகளை வழங்கினார். அருட்சகோதரர் மகேஷ் அவர்களும் கலந்து கொண்டு மாணவர்களுக்கான பரிசுகளை வழங்கினார். மழலைகளின் கண்கவர் கலைநிகழ்ச்சிகளோடு பெற்றோர்களின் நகைச்சுவை நடனமும் நடைபெற்றது. தொடர்ந்து அன்பின் விருந்தும் நடைபெற்றது.

திருமதி செலின் மேரி| திருமதி ஸ்னேகலதா| திருமதி ஹேமா

## TRANSFERS 2018

| No | NAMES | TRANSFERS FROM | TRANSFERED TO |
|---|---|---|---|
| 1 | Fr. Ajeesh Attiyil | | Addl: Drug and Alcohol Ministry |
| 2 | Fr. Ajin Jose | Thadikkara-konam | Vattakottai Mission |
| 3 | Fr. Alex Puthettu | Mankarai | Thirunelveli Mission/ Student |
| 4 | Fr. Anil Raj | Kattathurai | Director of Pulari Press Parish Priest of St. Mary's Chapel Thuckalay and Maria College |
| 5 | Fr. Ginoy Thottiyil | Press | Thirunelveli Mission – Coordinator |
| **6** | Fr. John (Subin Scaria) Puthenpurayil | New Priest | Assistant parish priest of Padanthalumoodu Priest In-Charge of Kunnuvilai & Helping for Holy Mass at Kuzhithurai (Weekdays) |
| 7 | Fr. John Joseph | Mathapuram | Parish Priest of Kattathurai and Valiattumugam Director of Mission League and Sub-Editor of Sirumalar |
| 8 | Fr. Joshy Kulathumkal | | Addl: Kuttaicode Mission |
| 9 | Fr. Robins Kuzhikodil | | Addl: Director of Pulari Enterprises |
| 10 | Fr. Mathew Thekkekutt | Spiritual Father at Minor Seminary | - |

| | | | |
|---|---|---|---|
| 11 | Fr. Prince Maliyil | Padanthalu-moodu | Parish Priest of Mankarai and Mathapuram<br>Local Administrator of St. James School, Valiyavilai |
| 12 | Fr. Ritto Thoompunkal | Minor Seminary | Higher Studies |
| 13 | Fr. Shoji Puthenpurackal | Sangamam | Parish Priest of Chenamcode / Kulaseharam<br>Office Secretary at Bishop's House |
| 14 | Fr. Shojo Erupathanchilchira | Director of CML | - |
| 15 | Fr. Sanil Panthichirackal | | Addl: Director of Catechism and Pulari Matrimony |
| 16 | Fr. Sumesh Valiyamthadathil | Chenamcode / Kulaseharam | Dean of Studies & Procurator of Minor Seminary<br>Parish Priest of Bengiri |
| 17 | Fr. Thomas Jebanesh | New Priest | Assistant Parish Priest of Vayalinkarai & Cheenivilai<br>Teacher at Christurajapuram School<br>Uravium Assistant Director |
| 18 | Fr. Thomas Thuckalay | Vattacottai | Addl: Priest In-charge of Kuzhithurai (Sundays) and Kodukkachivilai Mission at Malaicode (Tuesdays)<br>Eparchial Coordinator of Matha TV |
| 19 | Fr. Vinu Joseph | Vayalinkarai | Assistant Director of KKSSS<br>Addl: Parish Priest of Thadikkarakonam and Vellambi Mission<br>Stay at KKSSS |

Bishop George Rajendran SDB
*Diocese of Thuckalay*

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

## BISHOP'S ENGAGEMENTS MAY 2018

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Tue | 10.00 am | Pastoral council |
| | | 5.00 pm | Kurisadi blessing at Manjalumoodu |
| 2 | Wed | 10.00 am | Bishop's House: Personal meeting with fathers |
| | | 02.00 pm | >>> Changanassery |
| 3 | Thu | | Kummumthanam: Prayer |
| 4 | Fri | | Kummumthanam: Prayer |
| 5 | Sat | 09.00 am | Edathua: Holy Qurbana |
| 6 | Sun | 09.00 am | Holy Communion & Parish day at Arukani |
| | | 04.00 pm | Holy Mass & Kurisadi blessing at Marappady |
| 7 | Mon | 08.30 am | Soosaipuram: College GB meeting |
| | | 04.30 pm | Thekkupara: First Holy Communion |
| | | 08.00 pm | Bishops house: All Diocesan Correspondents meeting |
| 8 | Tue | 03.00 am | Sangamam: ACRCI National Meeting, Inauguration |
| 9 | Wed | 09.30 am | ACRCI National Meeting |
| 10 | Thu | 10.30 am | Muzhucode: Wedding Mass\|AIDACT National Meeting |
| | | 05.30 pm | Chenamcode: Feast day Mass & Blessing of Altar |
| 11 | Fri | | Engaged |
| 12 | Sat | 11.30 am | Sangamam: Inauguration of Sinai Theological Center |
| | | 06.30 pm | Thuckalay: Jubilee Qurbana of CMC sisters |
| 13 | Sun | 06.00 pm | Varuthattu: Feast day Holy Qurbana |
| 14 | Mon | 10.00 am | Meeting with Major Seminarians |
| | | 11.00 am | Curia meeting |
| 15 | Tue | 09.30 am | Kalluvilai: Recollection for teachers |
| 16 | Wed | 9.30 am | Kalluvilai: Seminar on Education Policy |
| May 17 - June 3 | | | USA visit and Mission appeal |

Rev. Fr. Shoji Puthenpurackal
Office Secretary



Munchirai St. George Feast
22.04.2018



VBS, Killiyoor
30.04.2018



TCYM - Executives Training - Social Entrepreneurship
14.04.2018



Madurai Mission Inauguration - 15,04.2018




For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570